**திரு. கோ. சி. மணி :** மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவிற்குள் தஞ்சை மாவட்டத்தில் ஒரு தொழில்பேட்டை ஆரம்பிக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இப்பொழுது தஞ்சையிலே தொழிற்பேட்டை நடந்துகொண்டிருக்கிறது. அதற்கு மேற்கொண்டு ஆரம்பிக்க முடியுமா என்பதெல்லாம் இப்பொழுது சொல்வதற்கு இல்லை.

**திரு. ம. கமலநாதன் :** கிருஷ்ணகிரியில் ஆரம்பிக்கப்படவிருக்கும் தொழில் பேட்டையிலே தொழில் ஆரம்பிக்க அநேகமாக யாரும் முன்வரவில்லை என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? 18 யூனிட்களிலே, 5 பேர்கள் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு முன் வந்திருக்கிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** எனக்கு வந்திருக்கின்ற தகவல் முற்றிலும் மாறாக இருக்கிறது. ஃபங்ஷனல் இண்டஸ்டிரியல் எஸ்டேட்டில் புரூட் புராஸஸிங் ஆரம்பிக்க வேண்டுமென்று பலர் வந்து அந்த இடத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** சேலம் ஜில்லாவிலே ஒரு தொழில் பேட்டை ஆரம்பிக்க உத்தேசம் இருந்தது. ஆனால் நில ஆர்ஜிதம் செய்யமுடியாமல் இருந்தது. அதைப்பற்றி உயர்நீதி மன்றத்திற்கு வழக்குச் சென்றது. ஆகவே, வேறு யாரிடமிருந்தாவது இடத்தை விலைக்கு வாங்கி அந்த இடத்தில் தொழிற்பேட்டை ஆரம்பிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்தத் தொழிற்பேட்டை ஹைகோர்ட்டில் தொக்கிக்கொண்டிருக்கிறது. இதுவரையில் 2, 3 இடங்கள் சேலத்திலே வாங்குவதற்கு முயற்சி செய்தோம். ஆனால் அங்கு இருக்கிற மக்கள், தங்களுக்கு இருக்கின்ற நிலம் போகாமல் தொழில்பேட்டை நடத்தினால் நல்லது என்று நினைக்கிறார்கள். அந்த வித்தையைச் செய்ய எங்களால் முடியவில்லை.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நீலகிரி ஜில்லாவிலே ஒரு தொழிற்பேட்டை ஆரம்பிக்க அமைச்சரவர்கள் அனுமதி அளிப்பார்களா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இன்னும் முடிவெடுக்கவில்லை என்று சொன்னேன்.

* 384 *Q.*—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of employees in Industrial Estates at Ambattur and Guindy?

THE HON. SRI R. VENKATARAMAN :

4,349 – at Industrial Estate, Guindy.

2,114 – at Industrial Estate, Ambathur.

This refers to direct employment and not to secondary and tertiary employment.

31st March 1965]

**திரு. ம. கமலநாதன் :** கிருஷ்ணகிரி தொழிற்பேட்டையில் உள்ள சைக்கிள் அசெம்பிள் செய்யப்படுகிற இடத்தில் எத்தனை தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள்? புரூட் புராஸஸிங்கிற்காக 18 யூனிட்டுக்களிலே எத்தனை யூனிட்டுகளுக்கு அப்ளிகேஷன் போட்டிருக்கிறார்கள்? அதன்மேல் என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்த விதமான வேண்டுகோள் வந்திருக்கிறது என்று சொன்னேன். அதைப் பற்றி முடிவு இன்னும் எடுக்கவில்லை.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** சேலத்திலே தொழிற்பேட்டை ஆரம்பிக்க, விற்கப்படாத, ஆர்ஜிதம் செய்யப்படாத இடங்கள் பல இருக்கின்றன. அந்த இடங்களில் தொழிற்பேட்டை ஆரம் பிக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** வசதியிருக்குமானால் செய்யலாம். சர்க்காருக்கு இந்த இடத்தில்தான் வைக்கவேண்டு மென்ற அவசியம் கிடையாது. பல வசதிகளையொட்டி நிலத்தைத் தேர்ந்தெடுக்கிறார்கள். சில ஜில்லாக்களிலே, தேர்ந்தெடுக்கிற நிலங்களை மக்கள் முன்வந்து கொடுத்து அதற்குவேண்டிய பல வசதிகளையும் செய்துகொடுத்து தொழிற்பேட்டை ஆரம்பிக்கிறார் கள். மற்ற இடங்களில் சிலர் இந்த இடம் வேண்டாம் என்று சொல்லி, ஒவ்வொரு இடமாகக் காட்டிக்கொண்டே போகிறார்கள். அவ்வாறு சொல்கிற இடங்களில் சேலமும் ஒன்று என்று நினைக் கிறேன். அதனால்தான் காலதாமதம் ஆகிறது.

*Location of wells by dowsing method*

* 385 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any scheme, to fix the location of wells by dowsing method, and if so, the details thereof?

THE HON. SRI P. KAKKAN : There is no such scheme in the Agriculture Department.

வேளாண்மைத் துறையில் அத்தகைய திட்டம் எதுவுமில்லை.

**புலவர் கா. கோவிந்தன் :** வட ஆற்காடு கிணற்றுப் பாசனம் நிறைந்த மாவட்டம். அங்கு கிணறுகள் எல்லாம் பாறைக் கிணறுகள். பாறைகளை உடைக்க இயந்திர வசதி செய்து கொடுக்கப்படுமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** உப கேள்வி இதிலே எழவில்லை. தனிக் கேள்வி போடவேண்டும். 9-00 a.m.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** நீரோட்டத்தைக் கண்டு பிடிக்க அக்ரிகல்சரல் டிபார்ட்மெண்டார் ஒரு கடியாரத்தை வைத்துக் கொண்டு பார்க்கிறார்கள். அந்த மாதிரி சோதனை செய்யப் பட்டதா? அல்லது பானிவாலா என்ற சாமியார் வந்து எதோ கண்டுபிடிப்பதாகக் கூறப்பட்டதே, அந்த முறையில் செய்ய உத்தேசம் இருக்கிறதா?